# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2023

| | | |
|---|---|---|
| தரம் :- 09 | சைவசமயம் I&11 | நேரம் :- 3 மணித்தியாலங்கள் |
| சுட்டெண்:.............................. | | |

## பகுதி – I

**பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1) ஓங்கார வடிவினராக விளங்குபவர் யார்?
   1. முருகன் 2. சிவன் 3. விநாயகர் 4. பிரம்மா
2) சிவராத்திரி காலத்திலே விசேடமாக வழிபடப்படுபவர்.
   1. சிவலிங்கம் 2. இலிங்கோற்பவர் 3. நடராஜர் 4. பிச்சாடவர்
3) ஆண்டாள் நாச்சியார் திருஅவதாரம் பெற்ற தினம் எது?
   1. சதுர்த்தி 2. திருக்கார்த்திகை 3. ஆடிச்சுவாதி 4. ஆடிப்பூரம்
4) கடக சங்கிராந்தி என அழைக்கப்படும் பண்டிகை
   1. ஆடிப்பிறப்பு 2. தைப்பொங்கல் 3. தீபாவளி 4. வருடப்பிறப்பு
5) திருமுறைகளைப் பாடியோர்.
   1. 12 2. 10 3. 63 4. 27
6) தாசமார்க்கத்தை கடைப்பிடித்து முத்தியடைந்தவர் யார்?
   1. நாவுக்கரசர் 2. சுந்தரர் 3. சம்பந்தர் 4. மணிவாசகர்
7) நாலாயிர திவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர் யார்?
   1. நம்பியாண்டார் நம்பி 2. ஆண்டாள் 3. ஸ்ரீமத்நாதமுனிவர் 4. சுந்தரர்
8) கௌதம முனிவரது அறிவுரையின்படி உமாதேவியார் சிவபெருமான் மீது அனுட்டித்த விரதம்.
   1. வரலட்சுமி 2. நவராத்திரி 3. கேதாரகௌரி விரதம் 4. பிரதோஷம்
9) உத்தராயணத்தின் தொடக்க நாளில் கொண்டாடப்படுவது.
   1. சித்திரைவருடப்பிறப்பு 2. தீபாவளி 3. ஆடிப்பிறப்பு 4. தைப்பொங்கல்
10) சம்பந்தர் இறுதியாகப் பாடிய பதிகம் எது?
   1. பித்தா பிறைசூடி 2. கூற்றாயினவாறு 3. காதலாகி 4. நமச்சிவாய
11) “யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி” என குறிப்பிடும் இலக்கியம்.
   1. திருமந்திரம் 2. தேவாரம் 3. திருவாசகம் 4. பெரியபுராணம்
12) ஐந்தாம் குரவர் என அழைக்கப்பட்டவர்.
   1. அருணாசலதேசிகர் 2. ஆறுமுகநாவலர்
   3. சேர்..பொன். இராமநாதன் 4. சேர்..பொன். அருணாசலம்
13) திராவிட வேதம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
   1. 1286 2. 16000 3. 4000 4. 13
14) திருபாண்டிக் கொடுமுடியில் வீற்றிருக்கும் இறைவிபெயர்.
   1. கமலாம்பிகை 2. பன்மொழியம்மை 3. மாதுமையம்மாள் 4. கௌரியம்மாள்

15) முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படுபவர் யார்?

1. சுவாமி விவேகானந்தர் 2. சுவாமி விபுலானந்தர்
3. சேர்..பொன். இராமநாதன் 4. ஆறுமுகநாவலர்

16) அன்னதானக் கந்தன் வீற்றிருக்கும் தலம் எது?

1. நல்லூர் 2. மாவிட்டபுரம் 3. செல்வச்சந்நிதி 4. மண்டூர்

17) "இந்தச்சரீரம் நமக்கு கிடைத்தது கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என குறிப்பிட்டவர் யார்?

1. சேர்..பொன். இராமநாதன் 2. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
3. சேர்..பொன். அருணாசலம் 4. அருணாசலதேசிகர்

18) சம்பந்தர் வாழ்ந்த வருடங்கள்.

1. 18 2. 16 3. 32 4. 81

19) விஜயதசமி அன்று நடைபெறுவது.

1. சூரன்போர் 2. கஜமுகாசுரன்போர் 3. மகிடாசுரன்போர் 4. நரகாசுரன்போர்

20) அன்பின் துணைக்கொண்டு உடம்பினால் செய்யப்படுபவை.

1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம்

**(20*2 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01. பின்வரும் பதிகங்கள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக.**

1. காப்பதோர் வில்லும் அம்பும்……..
2. காதலாகி……………….
3. மங்கையர்க்கரசி வளவர்கோன்……………..
4. ஏழிசையாய் இசைப்பயனாய்…………………

(12 புள்ளிகள்)

**02. "ஈழத்தில் சைவத்தை வளர்த்தவர்கள் பெரியார்களே"**

1. ஈழத்தில் சைவத்தை வளர்த்த பெரியார்கள் மூவரைத் தருக?
2. இராமகிருஷ்ண மிஷனூடாக சமய எழுச்சியை உண்டு பண்ணிய மகான் யார்?
3. சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர் அவதரித்த இடம், பெற்றோர் பெயர் யாது?
4. சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர் செய்த சமயப் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக? இவருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் எவை?

(12 புள்ளிகள்)

**03. கடவுளை அடைவதற்குரிய வழிவகைகளுள் சைவநாற்பாதங்களும் ஒன்றாகும்.**

1. சைவநாற்பாதங்களும் எவை?
2. சைவநாற்பாதங்களை அரும்பு, மலர், காய், கனி என்பவற்றிக்கு ஒப்பீடு செய்க.
3. இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகள் நான்கு தருக?
4. அட்டாங்க யோக உறுப்பக்களை குறிப்பிடுக. (12 புள்ளிகள்)

**04. “செடியாய வல்லினைகள் தீர்க்கும் திருமாலே”**

1. வைணவர்களின் முதன்மையான நூல் எது? அதன் மறுபெயர்கள் எவை?
2. முதலாழ்வார்கள் யாவர்?
3. நாலாயிர திவ்விய பிரபந்தத்திலுள்ள பாசுரங்களை அருளிய ஆழ்வார்கள் எத்தனை பேர்? இவற்றை தொகுத்தவர் யார்?
4. நாலாயிர திவ்விய பிரபந்தம் என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**(12 புள்ளிகள்)**

**05. “இல்லக விளக்கது இருள் கெடுப்பது”**

1. உள்ளத்திற்கு ஒளி தரும் விளக்கு எது?
2. நாவுக்கரசர் ஆரம்பத்தில் கடைப்பிடித்த மதம் எது? அங்கு அவருக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
3. நாவுக்கரசரின் தாய், தந்தை, இயற்பெயர், தமக்கையார் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுக.
4. நாவுக்கரசருக்கு சமணர்கள் செய்த கொடுமைகள் எவை?

**(12 புள்ளிகள்)**

**06. “நாளும் கோளும் நம்பரடியார்க்கு நலிவு செய்ய”**

1. பஞ்சாங்கம் என்றால் என்ன?
2. நமது நாட்டில் பயன்படுத்தப்படும் பஞ்சாங்கங்கள் எவை?
3. பட்சங்கள் எத்தனை? அவை எவை?
4. பஞ்சாங்கம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

**(12 புள்ளிகள்)**

**07. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.**

1. விரதங்கள்
2. மங்கையர்க்கரசியார்
3. சரியை
4. உயிரோம்புதல்

**(12 புள்ளிகள்)**